செ.வெ.எண்: 28 நாள்: 09.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள பதிவேடுகளை முறையாக பராமரிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.08.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு வருவாய்த்துறையின் மூலம் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு சான்றிதழ்கள் மற்றும் முக்கிய பணிகளை வட்டாட்சியர் அலுவலகம் மூலம் மேற்கொள்ள உத்தரவிட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் மற்றும் பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.




இதில் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ரொக்க கணக்குப்பதிவேடு, புதிய குடும்ப அட்டை மனுக்கள் பதிவேடு, பதிவறை கோப்புகள் வழங்கும் பதிவேடு, கோப்புகள் அழிக்கும் பதிவேடு, வருமானச்சான்று வழங்கும் பதிவேடு, பிறப்பு, இறப்பு பதிவேடு, கணினி பட்டா மாறுதல் பதிவேடு (முழுப்புலம்), இருப்பிடச்சான்று பதிவேடு, சிறப்புத் தபால் பதிவேடு, பதிவறைக் கோப்புகள் வழங்கும் பதிவேடு, வருகைத்தபால் பதிவேடு, அம்மா திட்ட மனுக்கள் பதிவேடு, உதவித்தொகை ஒப்பளிப்பு பதிவேடு, நில ஒப்படைப் பதிவேடு, தற்செயல் விடுப்பு பதிவேடு, மழையளவு பதிவேடு, பகிர்மானப்பதிவேடு, சுத்தநகல் பதிவேடு, பணியாளர் வருகைப்பதிவேடு, சான்றுகள் வழங்கும் பதிவேடு, அடகுக்கடை மற்றும் வட்டிக்கடை உரிமங்கள் பதிவேடு, வெடிபொருள் உரிமம் வழங்கும் பதிவேடு, துப்பாக்கி உரிமம் பதிவேடு போன்ற பல்வேறு பதிவேடுகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டதுடன் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களும் பெறப்பட்டது.

இந்த ஆய்வின் போது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கப்படும் கேள்விகளுக்கு 30 நாட்களுக்குள் உரிய முறையில் தகவலை வழங்கவும், பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்வதுடன் சான்றிதழ்களை தாமதமின்றி வழங்கவும், அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களும் தங்களது தொடர்புடைய பணிகளை சிறப்பாக மேற்கொள்வதுடன் வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள அனைத்து பதிவேடுகளையும் முறையாக பராமரிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொன்னமராவதி அருகிலுள்ள தூத்தூரில் பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.202 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் வட்டாட்சியர் அலுவலக கட்டிட கட்டுமானப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, வட்டாட்சியர்கள் திரு.ஆர்.மோகன்குமார் (பொன்னமராவதி), திரு.சீனிவாசன் (சமூகப்பாதுகாப்புத்திட்டம்), திரு.சங்கர், துணை வட்டாட்சியர்கள் திரு.கருப்பையா, திரு.கணபதி, பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:  செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**